சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட விரிவாக்கப் பகுதிகளில், நத்தம் மனைகளில் வசித்துவரும் மக்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும். புழல் ஒன்றியம், தீயம்பாக்கம், பெரியார் நகரில் வசிக்கும் 36 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும். சென்னை மாநகராட்சி, 16–வது வட்டம், சடையங்குப்பம் பகுதியில் அங்கீகரிக்கப்படாத 134 மனைகளை வரைமுறைப்படுத்தி பட்டா வழங்கிட வேண்டும்.

சென்னை மாநகராட்சி, 32–வது வட்டம், வீனஸ் நகர், தேவி நகர் பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும். மாதவரம் பகுதியில் உள்ள நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும். மாதவரம் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திட வேண்டும்.

மாதவரம் தொகுதி, 33–வது வார்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட வேண்டும். சீதாபதி தெரு, தட்டான்குளம் தெரு உள்ளிட்ட பகுதி இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18–2–2020), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

54. 2020–2021 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை மற்றும் 67 (59 புத்தகங்கள்.)

[2020 பிப்ரவரி 17

55. 2020–2021 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

56. 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

57. 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறிப்பு–பகுதி–I.

58. 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறிப்பு–பகுதி–II.

59. 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை குறிப்பின் இணைப்புகள்.

60. 2020–2021 ஆம் ஆண்டிற்கான நலத் திட்டச் செலவினங்கள் குறித்த அறிக்கை.

61. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு புதுமை முயற்சிகளின்கீழ் புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–II திட்டங்கள்.)

62. 2020–2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

63. வரவு–செலவுத் திட்ட விளக்க நூல், 2020–2021.

64. 2020–2021 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

65. 2020–2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

———